## மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2014

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு, 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 1980 இன் 01 ஆம் இலக்க மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவக வழிகாட்டியின் 20 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் படி வளங்களைக் கட்டுப்படுத்தும் இயலுமை, எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவகத்திற்கு உள்வருதலின் அடிப்படையில் சொத்துக்களாக கருத முடியும் என்பதுடன் மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் பிரதான கட்டிடம் அமைந்துள்ள 02 றூட் 1.5 பேர்ச் அளவான காணியின் உரித்து நிறுவனத்திற்குச் சொந்தமாக இல்லாதிருந்த போதிலும் மதிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் நிறுவகத்தின் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் மாதிரியின் படி சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கை**

நோர்வேயின் நிதியத்தில் முதலீட்டு வருமானத்தை கணக்கீடு செய்தல் தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையொன்று பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது கிடைத்த முதலீட்டு வருமானம் ரூபா 1,359,621 தொகை ஆண்டின் வருமானக் கூற்றில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 262,500 தொகை நோர்வேயின் நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் கடந்த ஆண்டில் ரூபா 980,000 தொகையான காசுரீதியற்ற சீராக்கங்களும் நிதிசார் செயற்பாடுகளின் கீழ் ரூபா 2,325 தொகையான உரித்தற்ற நிதிய வெளிப்பாய்ச்சல்களும் பிழையாகப் பதியப்பட்டிருந்தது.

**2.2.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நோர்வே நிதியத்தின் செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 18,707,876 ஆக இருந்ததுடன் நிறுவகத்தின் அறிக்கைகளின் படி அது ரூபா 19,359,465 ஆனமையால் ரூபா 651,589 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தினால் பெறப்பட்ட சேவைகளுக்காக கொடுப்பனவு செய்யும் போது உடன்படிக்கையின் படி நிறுத்தி வைத்தல் பணம் விடுவிக்கப்படாமல் ரூபா 109,239 தொகை 02 முதல் 06 வருடங்கள் வரையிலான கால வீச்சில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) சுகாதார அமைச்சு மற்றும் அரசாங்க வங்கியொன்றிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 8,405,718 தொகை 02 வருடங்கள் முதல் 06 வருடங்கள் வரையிலான காலம் அறவிடப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) நிறுவகத்தினால் ஊழியர்களுக்காக வழங்கப்பட்ட கடன் பணம் அவர்கள் ஓய்வு பெற்றுச் செல்வதற்கு முன்னர் அறவிடவேண்டியிருந்த போதிலும் இரண்டு ஊழியர்களிடமிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 7,514 தொகை 2008 ஆம் ஆண்டு முதல் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினதும் உயர் கல்வி நிறுவனங்களினதும் தாபன விதிக் கோவை | |
| (i) X ஆம் அத்தியாயத்தின் 1.6 மற்றும் XX ஆம் அத்தியாயத்தின் 3.3, 3.5 ஆம் பிரிவுகள் | நிர்வாகப் பதிவேடு பேணப்பட வேண்டியிருந்த போதிலும் பேராதனை பிரதேச நூலகத்தில் வருகை மற்றும் விடுமுறைப் பதிவேடு, வெளிச் செல்கைப் பதிவேடு முறையாகப் பேணப்படாதிருந்ததுடன் விடுமுறை பெற்றுக்கொள்ளும் போது பொது 125 மாதிரிப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) XX ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள் | நிறுவகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா சகல உத்தியோகத்தர்களினதும் வருகை மற்றும் வெளிச்செல்கை நேரம் பதிவேட்டில் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் கல்விசார் பதவியணியினரில் 7 உத்தியோகத்தர்களின் வருகை வெளிச்செல்கை பதியப்படாமல் ரூபா 8,284,331 கூட்டுத்தொகையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (iii) | X ஆவது அத்தியாயத்தின் ii ஆவது பகுதியின் 27.4 | வெளிநாட்டு கற்கை விடுமுறை அங்கிகரிக்கப்பட வேண்டிய போதிலும் 2013 ஆகஸ்ட் 15 ஆந் திகதி முதல் 2014 ஆகஸ்ட் 14 வரையான கால எல்லைக்காக பெறப்பட்ட வெளிநாட்டு கற்கை விடுமுறை 2015 மே 20 ஆந் திகதி வரையிலும் அங்கிகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருளுக்காக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் நிதிப்பிரமாணம் 394(இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 453,541 கூட்டுத்தொகையான இரத்துச் செய்யப்பட்ட 649 காசோலைகள் வருமானத்திற்கு எடுக்கப்படாதிருந்ததுடன் அந்த மீதிகள் நடைமுறைப் பொறுப்பாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2002 பெப்ரவரி 19 ஆந் திகதிய பீஈடீ/33 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | திறைசேரியின் முன் அங்கீகாரமின்றி ரூபா 95,883,688 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 5,945,485 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 10,331,319 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 16,276,804 இனால் வீழ்ச்சியடைந்தமைக்காக மீண்டெழும் செலவினம் ரூபா 23,326,529 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

### 3.2 நிதியத்தின் குறைந்த பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களின் படி தொலைக் கல்வியை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்திற்காக உலக சுகாதார அமைப்பினால் வழங்கப்பட்ட ரூபா 7,168,536 தொகையான நிதியில் ரூபா 4,982,803 தொகை செலவிடப்படாதிருந்ததுடன் அது 69 சதவீதம் நிதியத்தின் சேமிப்பானமையால் அந்த நிதியத்தின் செயற்திட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்தத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தின் அபிவிருத்தி நிதியத்தில் ரூபா 260,563 தொகையான மீதி 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளின் நிதியத்தில் ரூபா 4,000,000 தொகையான மீதி 2013 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வுத் திகதியான 2015 மே 15 வரையிலும் குறைந்த பயன்பாட்டுடன் காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பேராதனை பிரதேச நூலகத்தில் பாவனைக்கு எடுக்கப்படாமல் 02 கணனி மத்திய செயற்பாட்டு அலகுகள் (CPU 02), 03 மொனிட்டர் மற்றும் ஸ்கேன் இயந்திரமொன்று என்பன 15 மாத காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டன.

### 4.2 நூலக நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பேராதனை பிரதேச நூலகத்தின் அங்கத்துவம் கிடைத்த வைத்தியர்களுக்கு புத்தகங்களை வெளியில் எடுத்துச் செல்வதற்காக ஒருநாள் காலம் வழங்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 236,988 கூட்டுப்பெறுமதியான 11 புத்தகங்கள் 01 முதல் 14 மாதங்கள் வரையிலான கால வீச்சில் மீளக் கையளிக்கப்படாதிருந்தமை பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) தெரிவுப் பரிசோதனையின் படி வைத்தியர்களினால் ரூபா 7,500 தொகையான வைப்பின் கீழ் 02 வார காலத்திற்கு வெளியில் எடுத்துச் செல்லப்பட்ட ரூபா 325,757 பெறுமதியான 13 புத்தகங்கள் கணக்காய்வுத் திகதியான 2015 மார்ச் 02 ஆந் திகதி வரையிலும் மீளக் கையளிக்கப்படாதிருந்ததுடன் தாமதக் காலம் 15 வாரங்கள் முதல் 116 வாரங்கள் ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.3 இனங்காணப்பட்ட நட்டம்

பேராதனை பிரதேச நூலகத்திற்கு நன்கொடையாகக் கிடைத்த பெறுமதி கண்டறியப்படாத 03 புத்தகங்கள் மற்றும் ரூபா 49,894 பெறுமதியான புத்தகமொன்றும் காணாமல் போயிருந்தது.

### 4.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை நிறுவகத்தினால் பணிப்பொறுப்பு கையளித்தல் அடிப்படையில் சேர்க்கப்பட்டு சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 10 உத்தியோகத்தர்களுக்காக பல்கலைக்கழக ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புப் பணம் செலுத்தாமையினால் ஊழியர்களின் பங்களிப்பு ரூபா 506,795 தொகையும் மிகைக் கட்டணம் ரூபா 748,763 தொகையும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் மிகைக் கட்டணம் ரூபா 506,795 தொகையும் ஆக ரூபா 1,762,353 கூட்டுத்தொகையானது நிதியத்திலிருந்து செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் நிறுவகத்தினால் 65 பட்டப்பின் படிப்பு பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் மாத்திரம் ரூபா 146,490,708 தொகையான வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்ததுடன் அந்தந்த பாடநெறிக்கான வருமானம் மற்றும் செலவினங்களை கவனத்திற் கொண்டு செயலாற்றலை மதிப்பிடுவதற்கு பொருத்தமான கிரயக் கணக்கீட்டு முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நிறுவகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

நிறுவகத்தினால் பேணப்பட்டு வருகின்ற பட்டப்பின் படிப்பு பாடநெறிக்காக பாதீடு தயாரிக்கப்பட்டு அதற்குரிய அங்கீகாரம் பெறப்படவேண்டிய போதிலும் கணக்காய்வின் போது பரீட்சிக்கப்பட்ட 22 பாடநெறி மாதிரியில் 11 பாட நெறிகளுக்கு பாதீடு தயாரிக்கப்பட்டிராததுடன் தயாரிக்கப்பட்ட 10 பாடநெறிகளின் பாதீட்டிற்காக உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) இருப்புக் கட்டுப்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) நூலக நிர்வாகம்
(ஈ) நிதிக் கட்டுப்பாடு